ஏப்ரல் 2025

திராவிட வாசிப்பு

வாசிப்பும் மீள்வாசிப்பும்

மதுரையின் புதிய அறிவு கோபுரம்

வணக்கம்.

இந்த இதழுக்காக பல்வேறு தலைப்புகளில் கட்டுரைகள் எழுதித்தந்த தோழர்களுக்கு எங்களது வணக்கத்தையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

திராவிட வாசிப்பு குறித்த உங்களது மேலான கருத்துகளை, விமர்சனங்களை எதிர்பார்க்கிறோம். கீழ்காணும் மின்னஞ்சலுக்கு உங்கள் கருத்துகளை சொல்லுமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறோம். நன்றி!

உங்கள் படைப்புகளையும், கருத்துகளையும் இந்த மின்னஞ்சலுக்கு அனுப்பலாம்: dravidavaasippu@gmail.com

கட்டுரைகளை திராவிட வாசிப்பு ஆன்லைன் பக்கத்திலும் வாசிக்கலாம்: https://blog.dravidiansearch.com/

இதுவரை வெளியான திராவிட வாசிப்பு மின்னிதழ்களை “கிண்டிலில்” வாசிக்க: https://www.amazon.in/s?i=digital-text&rh=p_27%3ADravida%2BVaasippu&s=relevancerank&text=Dravida+Vaasippu&ref=dp_byline_sr_ebooks_1

இதுவரை வெளியான திராவிட வாசிப்பு மின்னிதழ்களை “ஆன்லைனில்” வாசிக்க: https://drive.google.com/drive/folders/1-6Sk8TylSzrCfiU0BJ-_Osvh7DRFCl0z?usp=sharing

இப்படிக்கு,
திராவிட வாசிப்பு Editorial Team:

- (அருண் ஆஷ்லி, அசோக் குமார் ஜெ, அஷ்வினி செல்வராஜ், தினேஷ் குமார், ஜெகன் தங்கதுரை, கதிர் ஆர்.எஸ்., மதுமலர், மனிதி தெரசா, இராஜராஜன் ஆர். ஜெ, டிமோத்தி, யூசுப் பாசித், விக்னேஷ் ஆனந்த், விஜய் ஜி.எஸ், பிரபு கணேஷ்)

நெ.து.சு . நினைவுகள் - நெ.சு. துரைசாமி

திராவிடமாடல் அரசு - கலைஞர் நூற்றாண்டு நூலகம் - வெற்றிச் செல்வன்

Bharatidasan-Poet who needs to be celebrated more - Mohit Palagiri

நோய்களும் குழந்தைகளும் – இனியன்

பாவேந்தர் பாரதிதாசனாரின் எளிய தமிழ்ப் பயன்பாட்டுக் கவியுத்திகள் - தமிழ்மைந்தன் ஜான் ரிச்சர்டு

நெ.து.சு . நினைவுகள் - நெ.சு. துரைசாமி

அனைவரும் வணக்கங்கள் மற்றும் வாழ்த்துக்கள்...

இந்த கட்டுரை அய்யா நெ.து.சு பற்றியது அவருடைய நினைவு நாளில் அவரை நினைவு கூற ...

அக்டோபர் 12 , 1912 ஆம் ஆண்டு காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள மிக சிறிய கிராமமான செய்யாற்றின் கரையில் அமைந்துள்ள நெய்யாடிபாக்கத்தில் திரு.துரைசாமி மற்றும் சாரதாம்பாள் தம்பதியரின் முத்த மகனாக பிறந்தார். அவருடன் உடன் பிறந்தவர்கள் முன்று தம்பிகள்.

அவருடைய தந்தையார் அந்த காலகட்டத்திலியே ஒரு சுயமரியாதை குணம் படைத்தவர் ஆகையால் வழக்கமான இருக்கும் சாதிய நடைமுறைகளை எதிர்த்தவர், யாரை வீட்டின் முன் வாசல் வழியாக வர கூடாது என்று இருந்த நடைமுறையை எதிர்த்து வீட்டின் முன் வாசல் வழியாக தான் வர வேண்டும் என்று தன் வீட்டில் நடைமுறை படுத்தினார். இப்படி பலவற்றில் ஊரோடு ஒத்து போகாமல் தவறுகளை திருத்த பார்த்தார், அதன் விளைவாக சிறுவர் நெ.து.சு அதை எண்ண ஓட்டத்தில் வளர்ந்தார், சிறு வயதில் மிட்டாய் கடையில் உள்ள ஒரு பண்டத்தில் கை வைக்க அதை அந்த கடைகாரர் ஆன அய்யர் கண்டிக்க அது எப்படி தீட்டு ஆகும் என்று எண்ணம் வளர தொடங்கியது. தந்தையை போல் சாதிய வேறுபாடு பார்க்காமல் அனைவருடனும் விளையாடுவதை வழக்கமாக்கி கொண்டார் , விதை சிறு வயதிலேயே போடபட்டது.

அவருடைய தந்தையார் பிள்ளைகள் படிக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தார். அதன் விளைவாக நெ.து.சு காஞ்சிபுரத்தில் உள்ள புகழ்பெற்ற ஆன்டர்சன் பள்ளியில் சேர்ந்து படித்தார் . சிறப்பாக படித்தார் தேர்ச்சி பெற்றார், மேல்படிப்பை சென்னை பிரசிடன்சி கல்லூரியில் சேர்ந்து படித்தார் MA honors சிறப்பாக படித்து தேர்ச்சி பெற்றார். பள்ளி படிக்கும் போதும் கல்லூரியில் படிக்கும் போது பெரியார் அவர்களுடைய மாநாடு மற்றும் சில பொது கூட்டங்களில் பங்கேற்று அவருடைய கருத்தியலை உள் வாங்கி கொண்டார். இது தான் அவர் இறுதி காலம் வரை அவர் வாழ்ந்த முறை .

கருத்தியல் தெரிந்து கொள்வது ஒரு வகை அதன் படி வாழ்ந்து காட்டுவது இரண்டாம் வகை , அந்த வகையில் நெ.து.சு இரண்டாம் வகை . 1944 ஆம் ஆண்டு சாதி மறுப்பு திருமணம் செய்து கொண்டார் நடத்தி வைத்தியவர் தந்தை பெரியார். அதன் படி குத்தூசி குருசாமி அவர்கள் மனைவி குஞ்சிதம் அவர்களுடைய தங்கையான காந்தமாள் அவர்களை மணந்தார், இவர்கள் இசை வேளாளர் வகுப்பை சேர்ந்தவர்கள், குடும்பத்தில் கடுமையான எதிர்ப்பு , அந்த எதிர்ப்பு எந்த வகை என்றால் அவரின் அன்பான தாய் அவர் இறந்து போகும் வரை அவரை பார்க்கவும் அனுமதிக்கவில்லை பேசவும் இல்லை , நெ.து.சு அவர்களுக்கு எவ்வளவு பெரிய சங்கடங்கள். சாதிய கட்டமைப்பு எப்படி இருந்தது என்பதற்கு இது ஒரு சிறந்த உதாரணம். இன்று பெரியார் என்ன சாதித்தார் என்று கேட்கும் சிலருக்கு இது போன்ற பல சாதனைகள் இருக்கிறது என்பது என் தாழ்மையான கருத்து. திருமண எப்படி நடந்தது தந்தை பெரியார் தலைமையில் நடந்தது , இந்த திருமணத்தில் பெரியார் அவர்களுடன் நெ.து.சு ஒரு இடத்தில் முரண்பட்டார் , பெரியார் தாலி கட்ட வேண்டும் என்றார் காரணம் அந்த சமுகத்திற்கு அந்த காலகட்டத்தில் இதற்கான உரிமை கிடையாது, ஆகையால் அதை வலியுறுத்தினார் பெரியார், ஆனால் நெ.து.சு பெரியாரின் கருத்தான தாலி கூடாது என்பதில் உறுதியாக இருந்தார், ஏன் அவர் பெரியார் தன் கருத்தை சில நேரங்களில் பலரின் வாழ்வில் ஒரு மாற்றத்தை உண்டாக்கும் என்றால் அதை மாற்றி கொள்ள தயங்காதவர்.

அவருடைய கல்வி பணி இதை விட பெரியது . இளம் வயதில் தொடங்கியது அவரின் கல்வி பணி படி படியாக முன்னேறி அவருடைய 44 ஆம் வயதில் சென்னை மாகணத்தின் பொது கல்வி இயக்குனர் ஆனார். இதில் சிறப்பு அந்த பதவிக்கு வந்த முதல் தமிழர் அவர் தான், அது வரை DIRECTOR என்று வழக்கத்தில் இருந்ததை இயக்குனர் என்று மாற்றினார், பெயர் மட்டுமே மாறவில்லை தமிழகத்தின் கல்வியின் நிலை மாறியது. எப்படி கி.பி , கி.மு இருக்கிறதோ அது போல் தான் தமிழக கல்வி துறையை நெ.து.சு விற்கு முன் நெ.து.சு விற்கு பின் என்று மாறியது. அவர் பெரியாரின் தொண்டர் அதன் வழியில் நடப்பவர் என்று தெரிந்தும் கர்மவீரர் அவரை இயக்குனர் ஆக நியமித்தார். பெரியார் அவர்கள் கூட கர்மவீரர் அவர்களிடம் இனிமேல் தமிழ்நாட்டு பிள்ளைகள் பற்றி கவலை வேண்டாம் என்று சொன்னார். இரு பெரும் ஆளுமைகள் தன் மீது வைத்த நம்பிக்கை வீண் போகாது வண்ணம் சிறப்பாக செயல்பட்டார். அதில் தலை சிறந்த பணிகள் சில

ஊர்தோறும் பள்ளி
மதிய உணவு திட்டம்
இலவச சீருடை திட்டம்
ஆசிரியர்களுக்கு ஒய்வு ஊதியம்
ஆசிரியர்களுக்கு காப்பீடு

என்று அவர் எடுத்த முயற்சிகள் கல்வி வெள்ளம் பாய உதவியது . காமராஜர் அவர்களின் எண்ணங்களை நிறைவெற்றி காட்டினார். காமராஜர் சிந்தனை அதை செயல்படுத்துவது நெ.து.சு.

இதன் பொருட்டு அவருக்கு PADMASHREE விருது வழங்கப்பட்டது. எனக்கு தெரிந்த வரை அவர் தான் முதல் அரசு ஊழியர் இந்த விருதை பெற . அன்றைய காலகட்டத்தில் மட்டும் அல்ல இன்றளவும் ஒர் அரசு அதிகாரிக்கு தமிழ்நாடு முழுவதும் ஒர் அதிகாரிக்கு இந்த வண்ணம் popularity இருந்ததில்லை, காரணம் மக்கள் சேவையை தவிர வேறு ஒன்றுமில்லை. விருது நகரில் காமராஜர் அவர்களிடமே ஒரு ஊரில் நெ.து.சு வந்தால் இந்த திட்டத்தை துவக்கி வைத்தால் உதவி செய்கிறோம் என்று மக்கள் தெரிவித்தார்கள் , காமராஜர் அதற்கு ஒப்பு கொண்டு அவரை அனுப்பி வைத்தார். மற்றொரு சமயம் வட சென்னையில் உள்ள தியாகராய கல்லூரியில் அவர் படத்தை நிறுவ காமராஜர் அவர்களிடமே திறக்க அனுமதி பெற்று ஒரு முதல்வர் தன் கீழ் உள்ள அதிகாரியின் படத்தை திறந்து வைத்த அதிசயங்கள் நடந்தது , மேலே சொன்ன அனைத்தும் மக்கள் அவர்பால் கொண்ட அன்பும் மரியாதையும் அதற்கான காரணம் அவருடைய பணி .

தன்னுடைய ஆசை மகனான திருவள்ளுவனை 10 வயது இருக்கும் போது இழந்தார், எவ்வளவு பெரிய சோகம் ஆனால் அது அவருக்கு தடையாக இருக்கவில்லை அதையும் தாங்கி கொண்டு மக்கள் பணியை தொடர்ந்தார்.

காமராஜருக்கு பிறகு அண்ணா இவரை CHIEF EDUCATIONAL OFFICER OF GOVT OF TAMILNADU ஆக்கினார், இவர் தான் முதலும் கடைசியுமாக அந்த பதவியில் இருந்தவர்.

கலைஞர் இவரை சென்னை பல்கலைக்கழக துணைவேந்தராக இரண்டு முறை நியமித்தார் அங்கேயும் அவர் பணி சிறந்து விளங்கியது , மாலை நேர கல்லூரிகள் துவங்கியது அப்போது தான் , சிலருக்கு மட்டுமே வாய்ப்பாக இருந்த பல்கலைக்கழகம் பலருக்கான வாய்ப்பாக மாறியது அப்போது தான் .

There is woman behind every man's success, இது நெ.து.சு விற்கும் பொருந்தும். அவருடைய மனைவி திருமதி.காந்தம்மா நெ.து.சு வை விட அதிகம் படித்தவர், அவருக்கு துணையாக இருந்து மகன் இறந்த போதும் தன்னுடைய பாதிப்பை வெளிப்படுத்தாமல் அவரின் பக்கபலமாக இருந்து அவருடைய கொள்கைகள் படி வாழ்ந்து காட்டியவர் இதனால் நெ.து.சு வின் பணி சிறப்பாக அமைந்தது .

கொள்கை உறுதி மக்களுக்கு நல்லது செய்ய வேண்டும் என்ற எண்ணம் இருந்தால் எவராலும் சாதிக்க முடியும் என்பதற்கு நெ.து.சு மிக சிறந்த உதாரணம்.

இந்த கட்டுரை முலம் அரசுக்கு ஒர் வேண்டுகோள் அவர் பிறந்த ஊரில் இருக்கும் நெ.ச.து அரசினர் பள்ளியில் இவருடைய சிலையை வைக்க திராவிட மாடல் அரசு ஆவண செய்ய வேண்டும். நம்முடைய முதல்வர் அதற்கான வாய்மொழி உத்தரவை தந்த பின் மாவட்ட ஆட்சியர் அதற்கான பணியில் இறங்கி ஒப்புதல் தந்த பிறகும் இன்று வரை சிலையை நிறுவ முடியவில்லை. இதை முதல்வர் நிறைவெற்றி தர வேண்டும் என்று ஊர் மக்கள் சார்பாக வேண்டி கொள்கிறோம் ...

அவரின் முழக்கத்துடன் இந்த பகிர்வை முடிக்கிறேன்

எல்லாரும் படியுங்கள்
நன்றாக படியுங்கள்
ஒன்றாக படியுங்கள்

நாட்டால் இந்தியன்
இனத்தால் திராவிடன்
மொழியால் தமிழன்

நன்றி வணக்கம்

நெ.சு. துரைசாமி

திராவிடமாடல் அரசு – கலைஞர் நூற்றாண்டு நூலகம் – வெற்றிச் செல்வன்

கலைஞர் நூற்றாண்டு நூலகம் தமிழ்நாட்டின் மிகப்பெரிய மற்றும் நவீன வசதிகளுடன் கூடிய நூலகமாகும். இது தமிழர் அறிவு மற்றும் பண்பாட்டை பாதுகாத்து வளர்க்கும் முக்கிய மையமாக விளங்குகிறது

“டிஎன்பிஎஸ்சி (TNPSC) குரூப் 4 படிக்கிறதுக்கு எல்லா பெசிலிட்டிஸ்மே (Facilities) , எல்லாமே எங்களுக்கு வந்து இந்த இடத்துல (கலைஞர் நூற்றாண்டு நூலகம்) கிடைச்சுச்சு, அதனால மட்டும்தான் நாங்க இந்த இடத்துல வந்து நிக்கிறதுக்கு முக்கிய காரணமா இருந்துச்சு. அதனால லைப்ரரில இருக்க எல்லாத்துக்கும் நன்றி. லைப்ரரி அமைச்சு கொடுத்த முதலமைச்சருக்கும், கலைஞர் நூற்றாண்டு நூலகத்திற்கும் ரொம்ப நன்றி.

என்னோட குடும்பம் பார்த்தீங்கன்னா விவசாய குடும்பம்தான். அப்பா பெரியப்பா எல்லாருமே விவசாயம்தான். நம்ம குடும்பம் எல்லாமே விவசாயம்தான், நம்ம வீட்ல நீதான் ஒரு ஆபீசரா பெரிய லெவல்ல போகணும் அப்படின்னு சொன்னாங்க

என்னதான் வேலை இருந்தாலும், நீ படிக்க போடா அப்படின்னாங்க, அந்த அளவுக்கு ஒரு ரெண்டு வருஷம் ஒரு இந்த லைப்ரரி (கலைஞர் நூற்றாண்டு நூலகம்) தொறந்ததுல இருந்து இங்கதான் வந்திருக்கேன். ஒன்றை வருஷம் கஷ்டப்பட்டாலும், இப்ப ஒரு நல்ல நிலைமையில இப்ப எஸ்எஸ்சில (SSC) சாப்ட் எக்ஸாம்ல சிபிஜ சப் இன்ஸ்பெக்டரா (CBI-Sub-Inspecyor) செலக்ட் ஆயிருக்கேன்."

மேலே இருப்பது பாலமுருகன் என்கிற மாணவர் எப்படி கலைஞர் நூற்றாண்டு கலைஞர் நூற்றாண்டு நூலகம் தன்னுடைய வாழ்க்கைக்கு ஒளிவிளக்காக இருந்தது என்பதை எடுத்துக்கூறும் நிகழ்கால சாட்சியம்.

இந்த நூலகத்தில் படித்த 17 பேர் டிஎன்பிஎஸ்சி குரூப் 4 (TNPSC-Group 4) மற்றும் எஸ்எஸ்சி (SSC) தேர்வுகளில் வெற்றி பெற்று அரசுப் பணியில் சேர்ந்துள்ளனர். மேலும், 16 கல்லூரி மாணவர்கள் விஎஃப்எக்ஸ் 3டி டிசைன் தொழில்நுட்பப் பயிற்சியும் பெற்று வருகின்றனர். இந்த நூலகம் மூலம் மாணவர்கள் சுயதொழில் தொடங்கவும் வாய்ப்புகள் உருவாகியுள்ளன.

கண்ணோட்டம்

- **இருப்பிடம் மற்றும் உள்கட்டமைப்பு** : கலைஞர் நூற்றாண்டு நூலகம் தமிழ்நாட்டின் மதுரையில் உள்ள புதிய நத்தம் சாலையில் அமைந்துள்ளது. இது 2.13 லட்சம் சதுர அடி பரப்பளவில் ஆறு மாடிகளைக் கொண்ட அதிநவீன கட்டிடமாகும், இதில் கிட்டத்தட்ட 3.3 லட்சம் புத்தகங்கள் உள்ளன. இந்த நூலகம் முதலமைச்சர் எம்.கே. ஸ்டாலினால் திறந்து வைக்கப்பட்டது, மேலும் சென்னையில் உள்ள அண்ணா நூற்றாண்டு நூலகத்திற்கு இணையான ஒரு மைல்கல் கட்டமைப்பாக மதுரையில் செயல்படுகிறது.

அம்சங்கள் மற்றும் வசதிகள்

- **தொகுப்புகள் மற்றும் பிரிவுகள்** : நூலகத்தில் 1824 இல் வெளியிடப்பட்ட ‘ சதுரகரதி’யின் முதல் பதிப்பு போன்ற அரிய தலைப்புகள் மற்றும் திராவிடத் தலைவர்களால் எழுதப்பட்ட சுமார் 50 தலைப்புகள் உட்பட பல்வேறு புத்தகங்களின் தொகுப்பு உள்ளது.
- இது அறிவியல், வரலாறு, மருத்துவம், தொழில்நுட்பம் மற்றும் போட்டித் தேர்வுகளுக்கு அர்ப்பணிக்கப்பட்ட பிரிவுகளைக் கொண்டுள்ளது. துடிப்பான ஓவியங்களால் வடிவமைக்கப்பட்ட குழந்தைகள் பிரிவு, போட்டித் தேர்வுகளுக்கான ஒரு பிரிவு மற்றும் அரிய தலைப்புகளுக்கான ஒரு பிரிவு ஆகியவை நூலகத்தில் அடங்கும்.
- **சமூக இடங்கள்** : நூலகத்தில் ஒரு கலைக்கூடம், பல்நோக்கு மண்டபம், ஊடாடும் தளங்களைக் கொண்ட குழந்தைகள் அரங்கம் மற்றும் 700 பேர் வரை தங்கக்கூடிய ஒரு மாநாட்டு மண்டபம் ஆகியவை அடங்கும்.

  இது ஒரு மெய்நிகர் ரியாலிட்டி அனுபவத்தையும் வழங்குகிறது, இது பார்வையாளர்கள் விமானத்தை இயக்குவது போன்ற அதிவேக நடவடிக்கைகளில் ஈடுபட அனுமதிக்கிறது.
- **அணுகல்தன்மை அம்சங்கள்** : நூலகம் மாற்றுத்திறனாளிகளுக்கு ஏற்ற அம்சங்களுடன் வடிவமைக்கப்பட்டுள்ளது, இது அனைத்து பயனர்களுக்கும் அணுகலை உறுதி செய்கிறது.

கட்டிடக்கலை அம்சங்கள்

1. **நவீன வடிவமைப்பு** : நூலகம் மதுரையின் கலாச்சார பாரம்பரியத்துடன் தடையின்றி கலக்கும் நவீன, அதிநவீன வடிவமைப்பைக் கொண்டுள்ளது. அதன் கட்டிடக்கலை அதன் சமகால பாணியால் குறிப்பிடத்தக்கது, இதில் பெரிய ஜன்னல்கள் மற்றும் திறந்தவெளிகள் உள்ளன, இது போதுமான இயற்கை ஒளியையும் திறந்த உணர்வையும் வழங்குகிறது.

2. **கலாச்சார ஒருங்கிணைப்பு** : நூலகத்தின் வடிவமைப்பு மதுரையின் கலாச்சார முக்கியத்துவத்தை பிரதிபலிக்கிறது, உள்ளூர் கட்டிடக்கலை மரபுகள் அல்லது மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோயில் போன்ற வரலாற்று அடையாளங்களுடன் எதிரொலிக்கும் கூறுகளை உள்ளடக்கியிருக்கலாம்.

3. **செயல்பாட்டு அமைப்பு** : நூலகத்தின் அமைப்பு செயல்பாட்டு ரீதியாகவும், பயனர் நட்புடனும் வடிவமைக்கப்பட்டுள்ளது, குழந்தைகள் பிரிவு, அறிவியல் பூங்கா மற்றும் கலைக்கூடம் போன்ற பல்வேறு பிரிவுகள் மற்றும் வசதிகளுக்கு இடையே எளிதாக வழிசெலுத்த முடியும்.

4. **அழகியல் கூறுகள்** : நூலகம் எட்டு அடி விட்டம் கொண்ட சரவிளக்குடன் கூடிய பெரிய குவிமாடத்தைக் கொண்டுள்ளது, இது அதன் அழகியல் ஈர்ப்பை அதிகரித்து வாசகர்களை ஈர்க்கிறது.



பயனர் அனுபவங்கள்

1. **குடும்பத்திற்கு ஏற்ற சூழல்** : நூலகத்தின் வரவேற்பு சூழ்நிலையை பார்வையாளர்கள் பாராட்டுகிறார்கள், இதில் குழந்தைகளுக்கான ஊடாடும் இடங்கள் அடங்கும். குடும்பங்கள் குளிரூட்டப்பட்ட நூலகத்தில் ஒன்றாக நேரத்தை செலவிடுவதை ரசிக்கிறார்கள், கிடைக்கக்கூடிய பல்வேறு வசதிகளைப் பாராட்டுகிறார்கள்.
2. **கலாச்சார முக்கியத்துவம் : இந்த நூலகம் மதுரையில் மீனாட்சி** சுந்தரேஸ்வரர் கோயிலுக்கு இணையான ஒரு கலாச்சார சின்னமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது . அதன் நவீன வசதிகள் மற்றும் கலாச்சார முக்கியத்துவத்திற்காக இது கொண்டாடப்படுகிறது, இது இப்பகுதி முழுவதிலுமிருந்து பார்வையாளர்களை ஈர்க்கிறது.
3. **கல்வி ஆதரவு** : இந்த நூலகம் மாணவர்களுக்கு மதிப்புமிக்க வளமாக செயல்படுகிறது, இதில் UPSC தேர்வெழுத விரும்புவோர் படிப்பதற்கு உகந்ததாகக் கருதுகின்றனர். இது

குழந்தைகளுக்கான அவ்வப்போது அமர்வுகளையும் சுய உதவிக்குழுக்களுக்கான பட்டறைகளையும் நடத்துகிறது.

வெற்றிக் கதைகள்

1. **சமூக ஈடுபாடு** : இந்த நூலகம் ஆண்டுதோறும் 10 லட்சத்திற்கும் மேற்பட்ட பார்வையாளர்களை ஈர்த்துள்ளது, இது சமூகத்தின் மீதான அதன் பிரபலத்தையும் தாக்கத்தையும் நிரூபிக்கிறது. பயனர்களிடையே சமூக உணர்வை வளர்க்கும் பல்வேறு நிகழ்வுகள் மற்றும் செயல்பாடுகளை இது நடத்துகிறது.
2. **வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவித்தல்** : குழந்தைகளிடையே நேர்மறையான வாசிப்புப் பழக்கத்தை ஏற்படுத்திய பெருமை இந்த நூலகத்திற்கு உண்டு. ஊடாடும் கற்றல் இடங்கள் மூலம் இளம் மனங்களை வளர்ப்பதில் இதன் பங்கை ஆசிரியர்களும் பெற்றோர்களும் பாராட்டுகிறார்கள்.

தனிப்பட்ட கதைகள்

1. கலைஞர் நூற்றாண்டு நூலகம் பல மாணவர்களின் வாழ்க்கையில் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்த நூலகம், போட்டித் தேர்வுகளுக்கு தயாராகும் மாணவர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக அமைந்துள்ளது.
2. பாலமுருகன், குரூப் 4 தேர்வில் வெற்றி பெற்று இந்து சமய அறநிலையத் துறையில் தட்டச்சராகப் பணியில் சேர்ந்துள்ளார். இவர், நிதி வசதி இல்லாதவர்கள் மற்றும் பயிற்சி வகுப்புகளுக்கு செல்ல முடியாதவர்களுக்கு இந்த நூலகம் மிகவும் பயனுள்ளதாக இருப்பதாகக் கூறுகிறார்.

"*பினான்ஸ்ல எய்ட் (Financial Aid) பண்ண முடியாத பேரண்ட்ஸ்க்கும் சரி, இன்ஸ்டிடியூட் (Institute) சேர்ந்து படிக்க முடியாத ஸ்டுடென்ட்ஸ்க்கும் (Students) சரி, புக்ஸ் வாங்க முடியாத ஸ்டுடென்ட்ஸ் சரி, அவங்க எல்லாத்துக்கும் உதவுற வகையில இந்த லைப்ரரி கண்டிப்பா இருக்கு*"

3. கோகிலா என்ற மாணவி, ஒரு வருடமாக இங்கு படித்து எஸ்எஸ்சி தேர்வில் வெற்றி பெற்றுள்ளார். இந்த நூலகம் கோவிலுக்கு சமம் என்றும், தினமும் இங்கு படித்தால் வெற்றி நிச்சயம் என்றும் கூறுகிறார்.

"*லைப்ரரி வந்து நீங்க டெய்லி ஒரு கோயில் மாதிரிதான். டெய்லி நீங்க காலையில வந்துட்டு படிச்சிட்டு, நெக்ஸ்ட் நீங்க மறுபடியும் சாந்திரம் போனீங்கன்னா கோயில் கடவுள் எப்படி நமக்கு வேணுங்கிறதை கொடுப்பாரோ, அது மாதிரி நீங்க லைப்ரரில டெய்லி வந்து படிச்சிட்டு போனாலே போதும் உங்களுக்கு கண்டிப்பா சக்சஸ் வந்து வரும்.*"

4. யாளினி என்ற மாணவி, வெளியில் விஎஃப்எக்ஸ் 3D டிசைன் படிக்க அதிக செலவாகும் நிலையில், இங்கு இலவசமாக கற்றுத் தருவதால் மிகவும் பயனுள்ளதாக இருப்பதாக கூறுகிறார். வெளியில் இதன் கட்டணம் 170k வரை இருக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

"*வெளியில வந்துட்டு இதுக்கு VFX 3D Design வந்துட்டு 170,000Rs அந்த மாதிரி வரைக்கும் இருக்கு இது வந்துட்டு ஃப்ரீயா கோர்ஸ் சொல்லித் தரதுனால, எங்களுக்கு வந்து ரொம்ப யூஸ்ஃபுல்லா இருக்கு, இது வந்து அடுத்தடுத்து நாங்க போறோம்னு நினைச்சு ரொம்ப ஒரு மாதிரி கிரேட் ஃபுல்லா இருக்கு.*"

5. மாவட்ட ஆட்சியர் சங்கீதா, இந்த நூலகம் தென் தமிழகத்திற்கு ஒரு சிறந்த வழிகாட்டியாக உள்ளது என்று குறிப்பிட்டார். மேலும், போட்டித் தேர்வுகளுக்கு தயாராகும் மாணவர்களுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் இந்த நூலகம் செய்து தருவதாகவும் அவர் கூறினார்.

6. திருமணமாகி இரண்டு குழந்தைகளுக்கு தாயான பெண்மணி ஒருவர், வீட்டில் நேரம் ஒதுக்கிப் படிக்க முடியாத சூழ்நிலையில், இந்த நூலகம் ஒரு பள்ளிக்குச் சென்று படிக்கும் அனுபவத்தை தருவதாகக் கூறுகிறார். இங்குள்ள அமைதியான சூழ்நிலையும், தேர்வு

எழுதுவதற்கான வசதியும் அரசுத் தேர்வில் வெற்றி பெற உதவியதாக அவர் தெரிவித்தார். இவர் தற்போது தடயவியல் அறிவியல் துறையில் பணிபுரிந்து வருகிறார்.

7. பொது நூலக இயக்கத்தில் ஜூனியர் அசிஸ்டன்டாக பணிபுரியும் மாணவர் ஒருவர், வெளியில் படிப்பவர்களுக்குப் புத்தகங்கள் கிடைப்பது கடினம், ஆனால் இங்கு எல்லா வசதிகளும் உள்ளன எனக் கூறினார்.

8. சிவகங்கையில் ஊரக வளர்ச்சித் துறையில் பணிபுரியும் மாணவர் ஒருவர் குரூப் 2 தேர்வுக்குப் படித்ததாகவும், குரூப் 4 தேர்வில் வெற்றி பெற்றதாகவும் கூறினார். இங்குள்ள புத்தகங்கள் மிகவும் பயனுள்ளதாக இருப்பதாகத் தெரிவித்தார்.

9. கார்த்திகா, TNPSC தேர்வர், நான்காவது தளத்தில் போட்டித் தேர்வுகளுக்கான புத்தகங்கள் தனியாக உள்ளன. இது எஸ்.எஸ்.சி, யூ.பி.எஸ்.சி, டி.என்.பி.எஸ்.சி போன்ற அனைத்து போட்டித் தேர்வுகளுக்கும் தயாராக உதவுகிறது. அனைத்து புத்தகங்களும் இங்கு கிடைக்கின்றன என்கிறார் .

இங்க பார்த்தீங்கன்னா ஃபோர்த் ஃப்ளோர்ல வந்து காம்பெடிவ் எக்ஸாம்ஸ்னு தனியா வந்து புக்ஸ் எல்லாம் வச்சிருக்காங்க, சோ வந்து ரொம்பவே ரொம்ப ஹெல்ப் ஃபுல்லா இருக்கு, நமக்கு ஒவ்வொரு எந்த டிபார்ட்மென்ட்ல நீங்க எந்த காம்பெடிவ் எக்ஸாம் பிரிப்பேர் பண்ணாலுமே இப்ப எஸ்எஸ்சில இருந்து யூபிஎஸ்சில இருந்து டிஎன்பிஎஸ்சி எந்த ஒரு காம்பெடிவ் எக்ஸாம் பிரிப்பேர் பண்ணாலுமே உங்களுக்கு எல்லா புக்ஸுமே அங்க அவைலபிலா இருக்கு.

10. ஏஎம்டிஎன் உடன் இணைந்து, அண்ணா நூலகத்தில் நடத்தப்பட்ட குரூப் 4 மாரத்தான் நிகழ்ச்சியை நேரலையாக ஒளிபரப்பி வீடியோ கான்பரன்சிங் மூலம் கலந்துரையாடல் செய்யப்பட்டது. குரூப் 2 தேர்வில் மாணவர்கள் வெற்றி பெற 13 மாதிரி தேர்வுகள் நடத்தப்பட்டன. இந்த நூலகத்தின் வளங்கள் மற்றும் வசதிகளைப் பயன்படுத்தி

டி.என்.பி.எஸ்.சி தேர்வில் 22 மாணவர்களும், எஸ்.எஸ்.சி தேர்வில் 2 மாணவர்களும் வெற்றி பெற்றுள்ளனர், என்கிறார் நூலகர் தினேஷ் .

முக்கிய டிஜிட்டல் தொழில்நுட்பங்கள் மற்றும் வசதிகள்

கலைஞர் நூற்றாண்டு நூலகத்தில் பயன்படுத்தப்படும் முக்கிய டிஜிட்டல் தொழில்நுட்பங்கள் மற்றும் வசதிகள்:

டிஜிட்டல் நூலக சேவைகள்: நூலகத்தில் பல்வேறு திறந்த அணுகல் (**Open Access**) மின்னிதழ்கள், ஆய்வுக் கட்டுரைகள், மற்றும் மின்னூல்கள் (**e-books**) கிடைக்கின்றன. இதில் அறிவியல், சமூக அறிவியல், கணினி அறிவியல், கணிதம், வேதியியல், வேளாண்மை போன்ற பல துறைகளின் மின்னிதழ்கள் உள்ளன.

மின்னூல்கள் மற்றும் டிஜிட்டல் நூலகங்கள்: **Project Madurai, Digital Library of India, Tamil Virtual Academy Library, World Digital Library** போன்ற பல தேசிய மற்றும் உலகளாவிய டிஜிட்டல் நூலகங்களின் வளங்கள் கிடைக்கின்றன.

விருப்பமிக்க வாசிப்பு மற்றும் அணுகல்: நூலகம் முழுவதும் வை-பை (**Wi-Fi**) வசதி உள்ளது, இதனால் பயனர்கள் தங்கள் சாதனங்களில் இணையத்துடன் இணைந்து மின்னூல்கள் மற்றும் ஆன்லைன் வளங்களை பயன்படுத்த முடியும்.

மாற்றுத்திறனாளிகளுக்கான டிஜிட்டல் வசதிகள்: தரைத்தளத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கான பிரிவு உள்ளது, இதில் பிரெயில் எழுத்து வடிவில் 1000 அச்சிடப்பட்ட புத்தகங்கள் மற்றும் ஆடியோ புத்தகங்கள் போன்ற வசதிகள் உள்ளன.

டிஜிட்டல் நூலக சேவை மூலம் அரிய நூல்கள்: அரிய நூல்கள் மற்றும் ஆய்வுக் கட்டுரைகள் டிஜிட்டல் நூலக சேவையின் மூலம் பெறக்கூடியவை.

கணினி மற்றும் தொழில்நுட்ப வசதிகள்: நூலகத்தில் கணினிகள், லிப்டுகள், நகரும் படிக்கட்டுகள், மற்றும் முழுமையாக ஏர் கண்டிஷனிங் செய்யப்பட்ட கட்டிடம் உள்ளது, இது பயனர்களுக்கு நவீன மற்றும் வசதியான வாசிப்பு சூழலை வழங்குகிறது.

இந்த டிஜிட்டல் தொழில்நுட்பங்கள் மற்றும் வளங்கள் கலைஞர் நூற்றாண்டு நூலகத்தை ஒரு நவீன, அணுகக்கூடிய மற்றும் பல்துறை அறிவுத்தளமாக மாற்றுகின்றன.

மாற்றுத்திறனாளிகளுக்கான ஆதரவு

- **மாற்றுத்திறனாளிகளுக்கு ஏற்ற அம்சங்கள்** : நூலகம் மாற்றுத்திறனாளிகளுக்கு ஏற்ற அம்சங்களுடன் வடிவமைக்கப்பட்டுள்ளது, இது அனைத்து பயனர்களுக்கும் அணுகலை உறுதி செய்கிறது. இதில் எளிதான வழிசெலுத்தலுக்கான சாய்வுப் பாதைகள் மற்றும் லிஃப்ட்கள் அடங்கும்.
- **டிஜிட்டல் அணுகல்** : பார்வைக் குறைபாடுள்ள நபர்களுக்கு அணுகக்கூடிய வடிவத்தில் புத்தகங்களை டிஜிட்டல் மயமாக்க நூலகம் நடவடிக்கை எடுத்து வருகிறது , இது உள்ளடக்கம் மற்றும் அணுகலை மேம்படுத்துகிறது.

உலகெங்கிலும் உள்ள நவீன நூலகங்களுடன் ஒப்பீடு

கலைஞர் நூற்றாண்டு நூலகம் மதுரையில் அமைந்துள்ள ஒரு நவீன, பெரிய அளவிலான பொதுநூலகமாகும். இது உலகின் முக்கிய நூலகங்களுடன் ஒப்பிடும்போது பல தனிச்சிறப்புகளும், உலக தரத்திலான வசதிகளும் கொண்டுள்ளது

அம்சம்/பகுதி	கலைஞர் நூற்றாண்டு நூலகம் (மதுரை)	உலகின் முக்கிய நூலகங்களுடன் ஒப்பீடு
பரப்பளவு மற்றும் கட்டிடம்	2.13 லட்சம் சதுரஅடி, 6 தளம் + தரைத்தளம் மற்றும் கீழ்தளம்; முழுமையாக ஏர் கண்டிஷனிங்; லிப்ட் மற்றும் நகரும் படிக்கட்டுகள்	சிங்கப்பூர் தேசிய நூலகம், அண்ணா நூற்றாண்டு நூலகம் (சென்னை) போன்ற பெரிய நூலகங்களுடன் ஒப்பிடக்கூடியது
புத்தகக் களஞ்சியம்	3.3 லட்சம் புத்தகங்கள்; தமிழ் இலக்கியம், அறிவியல், வரலாறு,	உலகின் பெரிய நூலகங்களுடன் ஒப்பிடும்போது சிறியதாயினும், மிகப்பெரிய

அம்சம்/பகுதி	கலைஞர் நூற்றாண்டு நூலகம் (மதுரை)	உலகின் முக்கிய நூலகங்களுடன் ஒப்பீடு
	அரிய நூல்கள் உள்ளிட்ட பல துறைகள்	பொதுநூலகங்களுடன் ஒப்பிடக்கூடிய அளவு
டிஜிட்டல் வளங்கள்	அறிவியல், சமூக அறிவியல், கணிதம், வேளாண்மை போன்ற துறைகளில் திறந்த அணுகல் மின்னிதழ்கள்; டிஜிட்டல் நூலக அணுகல்; வை-பை வசதி	உலகின் முன்னணி நூலகங்கள் போல டிஜிட்டல் வளங்கள் மற்றும் ஆன்லைன் சேவைகள் வழங்கப்படுகிறது
சிறப்பு பிரிவுகள்	குழந்தைகள், போட்டித் தேர்வுகள், மாற்றுத்திறனாளிகள் (பிரெயில் மற்றும் ஆடியோ புத்தகங்கள்), கருணாநிதி எழுத்துக்கள், அரிய நூல்கள்	உலக தரத்திலான நூலகங்கள் போல அனைத்து பயனாளர்களுக்கும் ஏற்ற வசதிகள் மற்றும் சிறப்பு சேவைகள்
கலாச்சார மற்றும் வரலாற்று முக்கியத்துவம்	திரு. கருணாநிதியின் இலக்கிய மற்றும் சமூக பங்களிப்புகளை நினைவுகூரும்; தமிழ் பண்பாடு மற்றும் திராவிட இயக்க வரலாறு	பிரிட்டிஷ் நூலகம், அலெக்சாண்ட்ரியா நூலகம் போன்ற உலகப் புகழ்பெற்ற நூலகங்கள் போல கலாச்சார மையமாக செயல்படுகிறது
சமூக மற்றும் கல்வி பங்கு	மாணவர்கள், ஆராய்ச்சியாளர்கள், இளைஞர்கள் மற்றும் முதியோர் அனைவருக்கும் அறிவுத்தளமாக; மாநாட்டு கூடங்கள், அறிவியல்	உலக நூலகங்கள் போல சமூகக் கல்வி மையமாகவும், அறிவு பரப்பும் இடமாகவும் செயல்படுகிறது

அம்சம்/பகுதி	கலைஞர் நூற்றாண்டு நூலகம் (மதுரை)	உலகின் முக்கிய நூலகங்களுடன் ஒப்பீடு
	ஆய்வுக்கூடங்கள், குழந்தைகள் திரையரங்குகள்	
செலவு மற்றும் முதலீடு	₹215 கோடி (சுமார் $27 மில்லியன்) செலவில் கட்டப்பட்டது; சுமார் ஒரு ஆண்டில் முடிக்கப்பட்டது	உலகின் பெரிய நூலக திட்டங்களுடன் ஒப்பிடக்கூடிய முக்கிய முதலீடு மற்றும் அரசாங்கத்தின் உறுதி

முதல்வர் மு.க. ஸ்டாலின் கலைஞர் நூற்றாண்டு நூலகத்தை திறந்துவைத்த போது, முன்னாள் முதல்வர் கலைஞர் கருணாநிதியின் தமிழுக்கான அர்ப்பணிப்பை நினைவுகூரி, இந்த நூலகம் தமிழர் பண்பாட்டையும் அறிவுத்தளத்தையும் வளர்க்கும் முக்கிய மையமாக இருக்கும் என்று கூறினார். மாணவர்கள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் பொதுமக்களுக்கு திறந்த இந்த நூலகம் நவீன வசதிகளுடன் கூடியது மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான பிரிவும் உள்ளதாகவும், தமிழின் வளர்ச்சிக்கு பெரும் பங்களிப்பு செய்யும் இடமாக அமையும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

கலைஞர் நூற்றாண்டு நூலகம் முதல்வர் மு.க. ஸ்டாலின் கூறியபடி, தமிழர் பண்பாட்டையும் அறிவுத்தளத்தையும் வளர்க்கும் முக்கிய மையமாகவும், மாணவர்கள், மாற்றுத்திறனாளிகள் மற்றும் பொதுமக்களுக்கு திறந்தவையாகவும் நவீன வசதிகளுடன் செயல்படுகிறது. நூலகம் பெரும் புத்தகக் களஞ்சியத்துடன், மாற்றுத்திறனாளி பிரிவு, குழந்தைகள் பிரிவு, அறிவியல் ஆய்வுக்கூடம் மற்றும் மாநாட்டு கூடம் போன்ற வசதிகளை வழங்கி, கல்வி மற்றும் பண்பாட்டு முன்னேற்றத்தில் முக்கிய பங்கு வகிக்கிறது. எனவே, முதல்வர் ஸ்டாலின் கூறிய நோக்கங்கள் நூலகம் மூலம் நிறைவேற்றப்பட்டுள்ளதென சொல்லலாம்.

வெற்றிச் செல்வன்
Vetri Selvan (Vetrismanikkam@gmail.com)

#Dravidanmodel #திராவிடமாடல் #**கலைஞர்நூற்றாண்டுநூலகம்**

ஆதாரங்கள்:

1. https://www.kalaignarcentenarylibrary.org/

Bharatidasan-Poet who needs to be celebrated more – Mohit Palagiri

I am a Telugu Periyarist. After reading Periyar, I became more interested in Tamil literature. I then read about the Thirukkural and Bharathiyar. Later, a stanza from a poem by Bharathidasan in the book Dravidian Movement by Perasiriyar Anbazhagan inspired me to explore more of Bharathidasan's works. It was very surprising to me that this man's name has not been as widely recognized as other upper-caste poets. Bharathidasan can be compared to P.B. Shelley, Jack London, John Milton, and many others great reformer poets.

Although he began his journey inspired by Bharathiyar and actively participated in the Indian Independence Movement—during which he wrote and personally sang songs about Indian freedom, with his works published in Swadeshi Mithran, the journal of Bharathiyar—he later, through his association with Periyar and the Self-Respect Movement, realized that independence without complete social justice would be futile.

Bharathidasan was inspired by Periyar's ideals of rationalism and social justice. He also attended many meetings and conferences. Bharathidasan wrote numerous poems in Kudi Arasu. This was a rare feat, as he was a prominent writer who contributed to two influential magazines that shaped Tamil literature and political discourse. Later, Bharatidasan wrote for films as well which includes songs and dialouges.

Bharathidasan is known for his writings that carry a fiery spirit, with every word striking the heart and awakening the wisdom of the individual. Even though his poems are filled with passion and intensity, they never lose their poetic sweetness or the brilliance of Tamil grammar. This unique blend earned him the title Puratchi Kavingar (Revolutionary Poet). In a 1938 conference, Periyar unveiled a portrait of Bharathidasan as a tribute, and he was widely acclaimed as the Bard of the Dravidian Movement.

Bharathidasan was a multifaceted poet. The way he described love was soulful and tender, while his portrayal of nature was so vivid that it allowed readers to visualize the scenes through his words. The same Bharathidasan could make his pen turn fierce when confronting dogma and superstition such as child marriage and slavery of women in society—his words struck at social backwardness like the lash of a thorned whip.

Bharathidasan was a man of action—he practiced what he preached, even within his own home. When he advocated for women's education, he ensured that his daughters received a good education, and one of them even went on to earn a

PhD. He stood in contrast to his early mentor, who promoted women's education in theory but personally denied it, believing that a Brahmin woman should not study. Bharathidasan was a true visionary. At a time when the world was divided into fragments, he championed the idea of global unity. He dreamed of a borderless world and wrote several poems reflecting this internationalist vision. Bharathidasan believed in humanism and expressed it powerfully in his poems. He emphasized that human beings possess immense potential and rejected the idea of divine intervention in human affairs, advocating instead for independent willpower. He envisioned a society free from the labels of caste, gender, and religion. Bharathidasan was also a socialist, advocating for class equality and the elimination of economic exploitation of the proletariat.

Bharathidasan is like an ocean, and his poems and lifestyle would take years to fully explore. Therefore, I urge all my readers to revisit his works time and again. Let us translate his writings into more languages and document his contributions in ways that will reach non-Tamil audiences. His works should be made accessible to all, so that people realize that Tamil Nadu and India have given birth to one of the greatest poets. It is unfortunate that bharathidasan is not celebrated as much as he deserves. He was not a poet who sang the glory of God or upheld the caste system; instead, he sought to liberate the common man from social backwardness.

Mohit Palagiri
palagiri2000@gmail.com

நோய்களும் குழந்தைகளும் – இனியன்

அரங்கம் 1 :

அதுவொரு தனியார் அமைப்பின் சிற்றரங்கம் கிட்டத்தட்ட 200 குழந்தைகள் இருந்தார்கள். அவர்கள் அத்தனை பேருக்குமே பெற்றோர்கள் இல்லை. அனைவரது பெற்றோருமே இறந்துதான் போயிருந்தார்கள். அந்தக் குழந்தைகளில் சிலரைத் தவிர மற்ற அனைத்துக் குழந்தைகளும் உற்சாகமாகவே இருந்தனர். உற்சாகம் என்றால் அவர்கள் வாழ்நாளில் அப்படியொரு கொண்டாட்டமான நாளை அவர்கள் அனுபவித்ததில்லை என்னும் அளவிற்கான கொண்டாட்டம். சிறிது நேரத்திற்கெல்லாம் சோர்வாய் இருந்த குழந்தைகளில் சிலரும் கொண்டாட்டத்தில் கலந்து கொண்டனர்.

கிட்டத்தட்ட 4 மணிநேரம் தொடர்ந்து விளையாடிக் கொண்டும் கதைகள் பேசிக்கொண்டும் இருந்தோம். அப்போது ஒரு குழந்தை தான் கதைகள் சொல்வதாக அருகில் மேடைக்கு வந்தார்.

“குருவிகள் மட்டுமே படிக்கும் பள்ளிக்கூடம் அது. அந்தப் பள்ளிக்கூடம் மின்சாரம் கம்பத்தில்தான் நடக்கும். அந்தப் பள்ளிக்கூடத்துக்கு அக்கா குருவியும், தம்பி குருவியும் வந்து சேர்ந்தனர். சேர்ந்த முதல் நாளிலேயே மற்ற அனைத்துக் குழந்தைகளும் நன்றாகப் பேசி சிரித்து மகிழ்ச்சியாக வரவேற்று ஜாலியா விளையாட ஆரம்பிசிடுச்சிங்க. அந்த ரெண்டு குருவிக்கும் அப்பா, அம்மா கிடையாது. ஏதோ நோவு வந்து அவங்க ரெண்டு பெரும் இறந்துட்டாங்க. அதனால் டீச்சரும் ரொம்ப பாசமா இருந்தாங்க. திடீரென ஒருநாள் அக்கா குருவிக்கும் ரொம்ப உடம்பு சரியில்லாம போய்டுச்சி. அடுத்த ரெண்டு நாளிலேயே அக்கா குருவி செத்தும் போச்சி. அப்புறம் ஒருநாள் பள்ளிக்கு போன தம்பி குருவிகிட்டே ஒருசிலரத் தவிர வேறு யாருமே பேசல, விளையாட வரல, விளையாட சேர்த்துக்கவும் இல்லை.
ஒருவாரம் கழிச்சி தம்பி குருவிகிட்டே உன்னை பள்ளியில்
சேர்த்துவிட்ட மாமாவ கூட்டிட்டு வான்னு டீச்சர் குருவி சொல்லி அனுப்பினாங்க. மாமா குருவி வந்ததும் ‘தம்பி குருவிய இனிமேல் பள்ளியில் வைத்துகொள்ள முடியாது, கூட்டிட்டு போங்கன்னு சொல்லிட்டாங்க.’ மாமா குருவியும் எதுவுமே சொல்லாம கூட்டிட்டு வந்துட்டாங்க. வரும்போது தம்பி குருவி கேட்டுச்சி, ’ஏன் மாமா என்னை பள்ளியை விட்டு அனுபிட்டாங்க?’ அதுக்கு மாமா குருவி சொன்னுச்சி,

‘உங்க அப்பா அம்மாவுக்கு வந்த நோவு வந்துதான் உன் அக்காவும் செத்துச்சாம். உனக்கும் அந்த நோவு இருக்கிறதால மத்த குருவிங்ககளோட அப்பா, அம்மா குருவிங்க உன்ன பள்ளிக்கூடத்துல வச்சியிருக்க கூடாதுன்னு சொல்லிட்டாங்கலாம். அதான் உன்னை கூட்டிட்டு போகச் சொல்லிட்டாங்க’ ன்னு சொன்னுச்சாம் மாமா குருவி. படிக்க ஆசைப்பட்ட தம்பி குருவி அதபோலவே நோய் இருக்கும் நிறைய குருவிகள் இருக்கும் பள்ளிக்கூடத்தில் வந்து படிக்க ஆரம்பிசிடுச்சாம்.”

இந்தக் கதை சொல்லிக் கொண்டிருக்கும்போது மதிய உணவு தயாராகி இருந்த நிலையில் அனைவரும் கலைந்து மதிய உணவு நோக்கி நகர்ந்தோம். உணவு முடிந்ததும் அனைத்துக் குழந்தைகளுக்கும் அரசாங்கத்தால் அனுப்பப்படும் இலவச மாத்திரைகள் கொடுக்கப்பட்டது. அதுவரையிலும் அந்த அரங்கில் இருந்துவிட்டு வெளியேறினேன்.

அங்கிருந்த அனைத்துக் குழந்தைகளும் HIV நோய்த் தொற்றால் பாதிக்கப்பட்டக் குழந்தைகள். கதை சொன்னவர் கூடக் குருவியை வைத்துச் சொன்னாரே தவிற அது அவரது வாழ்க்கைதான். பெரும்பாலும் பதின்பருவத்தில் இருந்தக் குழந்தைகள்தான் அவர்கள். அனைவருக்குமே பெற்றோர்கள் மூலமே தொற்றுக்கு ஆளானவர்கள். பல புறக்கணிப்பு மற்றும் கை விடல்களுக்கு பிறகு அக்குழந்தைகளில் பலரும் பள்ளிக்கு சென்று படித்துக் கொண்டுதான் இருந்தனர். இருக்கிறார்கள்.

சரியான ஆசிரியர்கள் மற்றும் தலைமை ஆசிரியர்கள் அமைந்தால் அவர்கள் பள்ளிகளுக்கு செல்வதிலேயோ, சரியான நேரத்திற்கு உணவும் மாத்திரையும் எடுத்துக் கொள்வதில் வாழ்வில் சிக்கலோ, நோயின் வீரியம் அதிகரிக்கவோ செய்யாது. இன்னும் சொல்லப்போனால் இந்நோயில் இருந்து மீளவும் கூடச் செய்வார்கள். மீண்டவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள் என்றெல்லாம் பகிர்ந்துக் கொண்டார் குழந்தைகள் அனைவரையும் பராமரிக்கும் அமைப்பின் நிர்வாகி.

அரங்கம் 2 :

பெரிய மருத்துவமனையின் குழந்தைகள் சிறப்பு பிரிவு. அங்கிருந்த குழந்தைகள் அனைவருமே புற்றுநோயின் வெவ்வேறு வகையிலும், நிலையிலும் இருக்கும் குழந்தைகளால் நிறம்பி இருந்தது. அதேபோல் வயது வேறுபாடுகளும் 5 வயது முதல் 16 வயது வரையிலான குழந்தைகள் என 45 பேர் இருந்தனர்.

மருத்துவமனை வளாகம் என்பதனால் வழக்கமான விளையாட்டுகளை விளையாடமுடியாத சூழலிலும், ஒருமணிநேரம் மட்டுமே நேர ஒதுக்கீடும் செய்திருந்ததால் கோமாளிகள் நிகழ்வு ஒன்றை மட்டும் செய்து வெளியேறினேன். எனக்குமே இது புதுமையான முயற்சியாகவே இருந்தது. இருந்தாலும் கூடுமான அளவிற்கு சிரிக்க வைக்க முயற்சி செய்து பல குழந்தைகளை சிரிக்கவும் வைக்க முடிந்தது.

நிகழ்வு முடிந்து அந்த மருத்துவமனையின் நிர்வாக இயக்குனரிடம் பேசிக்கொண்டிருந்தேன். இந்தக் குழந்தைகளில் சிலரைத் தவிர மற்றவர்கள் தங்களது இயல்பு வாழ்க்கைக்கு திரும்பி விடுவார்கள் என்னும் உத்திரவாதத்தை கொடுத்துவிட முடியாத சூழலில்தான் நாங்கள் இருக்கிறோம். என்னவொன்று நாட்களை தள்ளி வைக்க முடியும். அதிலும் செலவு செய்யத் தயாராக இருக்கும் பட்சத்தில் மட்டுமே. எனச் சொல்லி முடித்தார்.

கனத்த சிந்தனையுடன் அங்கிருந்து வெளி வந்தேன்.
இன்றையத் தேதிக்கு புற்றுநோய் என்பது உலகம் முழுவதும் பரவலாக காணப்படும் நோயாகவே இருந்தாலும் அறிவியல் மருத்துவம் அவற்றை வெல்லப் போராடிக் கொண்டுதான் இருக்கிறது. அதேநேரம் ஏன் இந்நோய் என்றெல்லாம் சிந்திக்கத் துவங்கினால். மாறிவரும் வாழ்வியல்முறை மற்றும் சுற்றுச் சூழல் பாதிப்பு, உணவு முறைகள், மரபணு சிதைவு எனப் பல காரணிகள் சொல்லப்படுகிறது. இந்தக் காரணிகளை முற்றிலும் சரி செய்துவிடக் கூடிய நிலையில் இந்த உலகம் இருக்கிறதா என்றால், அதெல்லாம் பெரும் அரசியல் போராட்டங்களை மையப்படுத்தியுள்ளது. அதனால் இவற்றிலிருந்தெல்லாம் மீள்வதற்கு தனிப்பட்ட முறையில் எதிர்கொண்டு வாழ்வியல் போராட்டங்கள் மட்டுமே நடத்தும் நிலைக்கு நாம் தள்ளப்படுகிறோம்.

அரங்கம் 3 :

மிகப்பெரிய கார்பரேட் மருத்துவமனையின் சிற்றரங்கம். அதே மருத்துவமனையின் தொண்டு நிறுவனம் ஏற்பாடு செய்திருந்த இதயநோய்லிருந்து மீண்ட குழந்தைகளுக்கான நிகழ்வு அது. கிட்டத்தட்ட 30 குழந்தைகள் இருந்தனர். மருத்துவர்கள் அனுமதியோடு மருத்துவர்களையும் இணைத்தே விளையாடினோம்.

இதயம் தொடர்பான நோய்களோடு பிறந்த குழந்தைகள் முதல் பதின் பருவத்தில் கண்டறியப்பட்ட இதயக் கோளாறுகள் உள்ளக் குழந்தைள் என அனைவரும் இருந்தனர். அவர்கள் பழங்குடியின குழந்தைகள், பல்வேறு பகுதிகளில் உள்ள மிகவும் ஏழ்மை நிலையில்

உள்ள குழந்தைகள் என்றே இருந்தனர். கடந்த 10 ஆண்டுகளில் 6000 குழந்தைகளுக்கு இலவசமாக அந்தத் தொண்டு நிறுவனம் மிகச் சிறியது முதல் பைபாஸ் மற்றும் இதய மாற்று அறுவை சிகிச்சை வரையில் செய்து இலவசமாக சரி செய்துள்ளனர்.

அப்படி இதயநோய்களை சரி செய்துகொண்ட குழந்தைகளில் இன்று பலர் கல்லூரி படிப்பு வரை செல்லத் துவங்கி விட்டனர் என மகிழ்வோடு பகிர்ந்துக் கொண்டனர். மேலும் 10 ஆண்டுகளுக்கு முன்பிருந்தப் பிரச்சனைகள் இன்று இல்லை. இதய அறுவை சிகிச்சை செய்துகொண்ட குழந்தைகள் மிக விரைவிலேயே இயல்பு நிலைக்கு திரும்பி, அணைத்து விதமான விளையாட்டுகள் முதல் கொண்டாட்டங்கள் வரை மேற்கொள்ளும் வகையில் மருத்துவ அறிவியல் வளர்ச்சி அடைந்துள்ளது என்றெல்லாம் கூறினர் அங்கிருந்த மருத்துவர்கள்.

இது பொதுவாக நம் அனைவருக்குமே தெரிந்த வளர்ச்சிகள்தான் என்றாலும் பத்து வருடங்களில் 6000 குழந்தைகள் குறுப்பிட்ட சில பகுதிகளில் மட்டும் பல்வேறு வகைமையில் இதய நோய்கள் உடையக் குழந்தைகள் கண்டறியப்படுகிறார்கள் என்றால் ஒட்டுமொத்த மாநிலத்திற்கும், நாட்டிற்கும் கணக்கிட்டால் வருடத்திற்கு எத்தனை லட்சம் குழந்தைகள் இதய நோய்களுடன் வளம் வருகிறார்கள் என்னும் எண்ணிக்கை பிரமிப்புடன் கவலை கொள்ளச் செய்கிறது.

இவையனைத்தும் ஒருபுறமிருக்க இந்த நிகழ்வுகளில் இருந்து ஒன்றை உன்னிப்பாக கவனிக்க முடிகிறது. இரண்டும் மற்றும் மூன்றாம் நிகழ்வுகளில் உள்ள குழந்தைகள் நோய்கள் அறியபட்டவுடனோ அல்லது குணமாகி மீண்டும் தங்களது இயல்பு வாழ்க்கைக்கு திரும்பியவுடனோ பள்ளிகள் முதல் சமூகம் வரை அனைவரும் அவரகளது நோய்மை மற்றும் உடல்நிலையைக் கருத்தில் கொண்டு பரிதாபமாகவே அவர்களை அணுகி ஏதோவொரு வகையில் இருக்கும் சமூகம்தான், இன்றும் HIV போன்ற நோய் இருக்கிறது எனத் தெரிந்தவுடன் தீண்டாமையை கடைபிடிப்பதை காணமுடிகிறது.

இத்தனைக்கும் HIV மற்றும் பால்வினை நோய்கள் பேசுவதாலோ, பழகுவதாலோ, ஒன்றாக சாபிடுவதாலோ பரவக் கூடிய நோய் அல்ல என்று அது கண்டுபிடிக்கப்பட்டக் காலம் முதலே சொல்லி வருகிற பிரச்சாரங்கள்தான் என்றாலும் இன்றும் பாதிக்கபடும் குழந்தைகள் புறக்கணிப்பு செய்யப்பட்டுக் கொண்டே இருக்கிறார்கள். இத்தனைக்கும் முறையான மருந்துகளும், சரிவிகித உணவுகளும், சமூக அரவணைப்புகளும் கிடைத்தால் HIV நோயிலிருந்து முழுவதுமாக குணமாகும் நிலை இருக்கும் காலத்திலும்.

இருந்தாலும் இந்த மனோநிலை ஏன் ஏற்படுகிறது. இதனைச் சரியாகக் கற்பிக்கப்படாதப் பாலியல் கல்வி மற்றும் பாலினச் சமத்துவக் கல்வி இவை இரண்டுடன் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டிய தேவை இருக்கிறது. ஒவ்வொரு வகுப்பறைகளுக்குள்ளும் அந்தந்த வகுப்புக்கும் வகுப்பில் இருக்கும் குழதைகளின் வயதுக்கும் ஏற்றாற்போல் இந்த இரண்டு கல்வியும் கற்பிக்க வேண்டும்.

அப்படிக் கற்பிக்கப்பட்டால் மட்டுமே இனிவரும் காலங்களிலாவது இதுபோன்ற நோய்களுக்கான புறக்கணிப்புகளும் நடைபெறாமல் இருக்கும். கூடவே உயிரினங்களின் அத்தியாவசியத் தேவைகளில் ஒன்றான பாலியல் தேவைகள் மற்றும் தேர்வுகள் குறித்த உரிமைகளும், புரிதல்களும் ஏற்படும். இவற்றை எல்லாம் விடப் பாலினச் சமத்துவமும் பரவலாக்கப்படும்.

#இனியன்

பாவேந்தர் பாரதிதாசனாரின் எளிய தமிழ்ப் பயன்பாட்டுக் கவியுத்திகள் - தமிழ்மைந்தன் ஜான் ரிச்சர்டு

முன்னுரை:

Poetry is the spontaneous overflow of powerful feelings: it takes its origin from emotion recollected in tranquillity என்பார் ஆங்கிலக் கவிஞர் வில்லியம் வேர்ட்ஸ்வொர்த். கவிதை என்பது ஒரு கவிஞனின் ஆற்றல்மிகுந்த எண்ணத் தொகுப்புகளின் தன்னிச்சையான எழுச்சியால் எழுதப்படும் வார்த்தைகளின் தொகுப்பு. சமூக நோக்கில் எழுதப்படும் தற்காலப் புதுக்கவிதைகளில் இத்தகைய உணர்வுகளின் எழுச்சி மேலோங்கியிருப்பதைக் காணலாம். இருபதாம் நூற்றாண்டில் தமிழ் கண்ட கவிதைப் புரட்சி புதுக்கவிதை வடிவமாய் ஊற்றெடுத்துப் பொங்கி வழியக் காரணமாயிருந்தோரில் ஒருவர் புரட்சிக் கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன்.

தூய தமிழ்ச் சொற்களுடன், அவை மரபாய் இருந்தாலும், புதுக்கவிதை வடிவாய் இருந்தாலும் எளிய தமிழ்ச் சொற்களால் கவிதைகளை, பாடல்களை வடிவமைத்து அதை எளிய மக்களைச் சென்றடையும் வண்ணம் கவிதைப் புரட்சிக்கு அடிகோலியவர் பாவேந்தர் என்றால் மிகையாகாது.

இவருடைய கவிதை உத்திகளே, மொழித் திணிப்புச் சூழலில் இளையோர், மாணாக்கர் மத்தியில் பெரும் எழுச்சியை உருவாக்கியது என்பார் பாவேந்தரின் பாடல்களை உள்வாங்கிய தமிழறிஞர் பெருமக்கள்.

பாவேந்தர் ஓரிரவில் எழுதி முடித்த தமிழியக்கம் என்னும் கவிதை நூல் இதற்கெல்லாம் உரமாய், தூண்டுகோலாய் அமைந்தது. அது குறித்து, இக்கட்டுரையில் காண்போம்.

பாரதிதாசனார் காட்டும் தமிழின் சிறப்பு:

தமிழுக்கும் அமுதென்று பேர்
அந்த தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்
உயிருக்கு நேர்!

தமிழுக்கு நிலவென்று பேர்! – இன்பத்

தமிழ் எங்கள் சமுகத்தின் விளைவுக்கு நீர்

தமிழுக்கு மணமென்று பேர்!
இன்பத் தமிழ் எங்கள் வாழ்வுக்கு நிருமித்த ஊர்

தமிழுக்கு மதுவென்று பேர்! – இன்பத்
தமிழ் எங்கள் உரிமைச்செம் பயிருக்கு வேர்!

என்று பாவேந்தேர் தமிழை அமுதென்று பாடினாரே. ஏன் பாடினார்?

தமிழ் கன்னல் சுவையைக் காட்டிலும், தேனின் சுவையைக் காட்டிலும் இனிமையானது என்பதால் மட்டுமா. இல்லை... இல்லை...

தமிழ் தமிழ் தமிழ் என்று விரைவாகச் சொல்லி நிறுத்தினால் அமிழ்தென்ற சொல் தோன்றும். மொழியின் பெயரிலே அமிழ்திருப்பதால், தமிழ் அமுது என்பதாலே அவ்வாறு பாடினார் என்பதை உணர முடியும்.

இயல், இசை, நாடகம் என்று அனைத்திலும் அமுது ஊட்டுவாள் தமிழன்னை. தமிழின் பறையிசையைக் கேட்டுப் பாருங்கள். உடலின் நாடி நரம்பெல்லாம் முறுக்கேறும், கால்கள் துடித்தெழும். கைகள் நயம் தொடுக்கும். ஒவ்வொரு திசுவும் நடம் புரியும். கொம்பு, முழவு, யாழ், குழல் என்று அத்தனை இசைக் கருவிகள் தருவதும் அமுதே.

இனிமை கூட்டி அக வாழ்க்கையையும், புற வாழ்க்கையையும் அழகாய் எடுத்துச் சொல்லும் அத்தனையும் தமிழில் உண்டு என்பார் பாவேந்தர்.

அதைத்தான் மகாகவி இவ்வாறு பாடினார்

யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல்
இனிதாவது எங்கும் காணோம்,
பாமரராய் விலங்குகளாய், உலகனைத்தும்
இகழ்ச்சிசொலப் பான்மை கெட்டு,
நாமம் அது தமிழரெனக் கொண்டு இங்கு
வாழ்ந்திடுதல் நன்றோ? சொல்லீர்!
தேமதுரத் தமிழோசை உலகமெலாம்

பரவும்வகை செய்தல் வேண்டும்.

...

...

உள்ளத்தில் உண்மையொளி யுண்டாயின்
வாக்கினிலே ஒளி யுண்டாகும்
வெள்ளத்தின் பெருக்கைப்போல் கலைப்பெருக்கும்
கவிப்பெருக்கும் மேவு மாயின்
பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெல்லாம்
விழிபெற்றுப் பதவி கொள்வார்,
தெள்ளுற்ற தமிழமுதின் சுவைகண்டார்
இங்கமரர் சிறப்புக் கண்டார்

என்று தமிழமுதின் சுவைகண்டோர் அமரரைக் காட்டிலும் சிறப்புப் பெறுவர் என்று தமிழமுதைச் சுவைப்பவர்களையே சிறப்பித்தால், தமிழின் சிறப்பைச் சொல்லுதல் வேண்டுமோ?

இத்தகையச் சிறப்பைப் பெற்ற செம்மொழித் தமிழ் இலக்கியங்களில் சங்க இலக்கியங்கள் தொட்டு இன்றைய இலக்கியம் வரை இனிமையும் உண்டு, சுவையும் உண்டு, பக்தியும் உண்டு, புரட்சியும் உண்டு.

மரபின் வழிநின்று பாவியற்றி தமிழை எத்திசைக்கும் எடுத்துச் சென்ற சங்ககாலப் புலவர் முதல் நவீன இலக்கியச் சாரலாய், புதுமையைப் புகுத்தி புதுக்கவிதை வடிவாய், எளிய சொற்களால் - எல்லோருக்கும் புரியும் விதத்தில் - தமிழை இருபதாம் நூற்றாண்டில் இன்னும் இளமையாய் மாற்றியோரில் - நாம் முதன்மையாகக் காண்போர் பாரதியாரும், அவர்தம் தாசன் - புதுவையின் முத்துப் பரலாய், நம்மை கைபிடித்து தமிழ் மறுமலர்ச்சி திசையில் அழைத்துச் செல்லும், பாரதிதாசனாரும் ஆவர்.

முன்னவர் உள்ளத்தின் உள்ளுவகையில் ஊற்றெடுக்கும் வார்த்தைகளுக்குச் சொந்தக்காரர். பின்னவர் தமிழை தன்னுயிராகக் கொண்டு, தகிக்கும் புரட்சி வார்த்தைகளால் தமிழர்களை தமிழின்பால் அன்பைப் பொழியச் செய்தவர், தமிழரைத் தட்டி எழுப்பியவர்.

எப்போதெல்லாம் தன் வளர்ச்சி மட்டுப்படுகிறதோ, அப்போதெல்லாம் - தன்னை தகவமைத்துக் கொள்ளத் தன்னுயிர் புதல்வர்களை இப்புவிக்குத் தருவாள் தமிழன்னை.

அத்தகைய தவப்புதல்வர்களாய், இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற கவிஞராய் உதித்தவர்தாம் இவ்விருவரும்.

பாரதிதாசனார் வழியில் தமிழியக்க மறுமலர்ச்சி

தொல்காப்பியர் தந்த இலக்கண வளத்துடன், எண்ணற்ற புலவர் பெருமக்கள் இயற்றிய இலக்கியச் செழுமையுடன், மொழியாய் மட்டுமன்றி வாழ்வியல் நெறியாய், பண்பாட்டு அடையாளமாய், கலை வடிவாய், கலாச்சார விழுமியாய் என்றும் வளமையாய், செழுமையாய், இளமையாய் வாழ்ந்தவள் தமிழன்னை.

செம்மொழி இலக்கண நெறிப்பாட்டுடன் தனித் தமிழாய் வலம் வந்த நிலையில் இடை வந்த மொழிகளின் கலப்பால் சற்றே தடுமாறிய காலத்தில் அதை மீட்டெடுக்க களமாடிய தேவநேயப் பாவாணர், மறைமலை அடிகளார் போன்றோர் வழியில் உரக்கக் குரல் கொடுத்தவர் பாவேந்தர் பாரதிதாசனர் அவர்கள்.

இருபதாம் நூற்றாண்டில் வடமொழி கலப்பைத் தவிர்க்கவும், இந்தி மொழி திணிப்பை எதிர்த்தும் குரல் எழுப்பியவரில் முதன்மையானவர்களில் பாரதிதாசனாரும் ஒருவர் என்பதில் ஐயம் ஏதுமில்லை. எளிய தமிழ்நடையில் மரபு - புதுக்கவிதைக் கலப்பால் கற்றோர், கல்லாதோர் என அனைவரையும் அன்னைத் தமிழுக்காக குரல் கொடுக்கச் செய்தவர் பாவேந்தர்.

மேலும் தமிழரை,

வெள்ளம் போல் தமிழர் கூட்டம்! வீரங்கொள் கூட்டம்! அன்னார்
உள்ளத்தால் ஒருவரே! மற் றுடலினால் பலராய்க் காண்பார்.

என்றழைத்து தமிழ் மொழி வளர்ச்சிக்காக ஒருங்கிணைத்தவர் பாவேந்தர் என்றால் மிகையல்ல.

தமிழ்மொழி வளர்ச்சிக்காக, தமிழரை இயக்கமாக உருவாக்க **தமிழியக்கம்** என்ற கவித்தொகுப்பை நூலாக வெளியிட்டார். இந்த கவித்தொகுப்பு, தமிழரைத் தமிழ் மொழி மேல் பற்றுக்கொள்ள வைக்கும் புரட்சிப் பாக்களாக வரலாற்றில் இடம் பிடித்துள்ளது என்று நம்பலாம்.

தமிழியக்கம் நூல் விடுக்கும் அறை கூவல்:

புதுக்கவிதை வடிவில் பல்வேறு கவிதை நூல்களையும் இயற்றியுள்ள பாரதிதாசனார், தமிழ் மொழி மறுமலர்ச்சிக்காக அறைகூவல் விடுத்து 120 அறுசீர் கழிநெடிலடி ஆசிரிய விருத்தங்களால் ஆன தமிழியக்கம் என்ற கவித்தொகுப்பை வெளியிட்டு, தமிழரைத் தட்டி எழுப்பினார். இக்கவிதைகள் அனைத்தையும் ஒரே இரவில் எழுதி முடித்தார் என்ற செய்தி, அவர் தமிழின் பால் கொண்டிருந்த தாகத்தை உலகிற்கு வெளிச்சமிட்டுக் காட்டும்.

இந்த 120 பாடல்கள், 24 தலைப்புகளின் கீழ், பல்வேறு துறை சார்ந்த மக்களை, தமிழை வளர்க்க அழைப்பு விடுத்து எழுதப்பட்டுள்ளது. அவற்றினூடே பயணித்து யாம் உள்வாங்கி வியந்த கருத்துகளை, ஒரு சில எடுத்துக்காட்டுகளின் மூலம் பகிர்கிறேன்.

தமிழ்மொழி, பிற மொழிக் கலப்பினால் கட்டுண்டு - தமிழர் தம் தாய்மொழியை விடுத்து, பிறமொழிகளின் பால் ஈர்ப்புக்கொண்டு, தமிழ் மொழியைப் புறக்கணிக்கும் நிலை கண்டு நெஞ்சு பதைத்து,

கரும்புதந்த தீஞ்சாறே, கனிதந்த நறுஞ்சுளையே, கவின்செய் முல்லை
அரும்புதந்த வெண்ணகையே அணிதந்த செந்தமிழே அன்பே, கட்டி
இரும்புதந்த நெஞ்சுடையார் துறைதோறும் நின்னெழிலை ஈட ழித்து
வரும்புதுமை நினைக்கையிலே நெஞ்சுபதைக் கும்சொல்ல வாய்ப தைக்கும் (1)

உடலியக்கும் நல்லுயிரே, உயிரியக்கும் நுண்கலையே, மக்கள் வாழ்வாம்
கடலியக்கும் சுவைப்பாட்டே, கண்ணான செந்தமிழே, அன்பே, நாட்டில்
கெடலியக்கும் நெஞ்சுடையார் துறைதோறும் நின்னெழிலைக் கெடுக்கப் பாடு
படல்தன்னை நினைக்கையிலே நெஞ்சுபதைக் கும்பகர வாய்ப தைக்கும். (4)

என்பதின் வழியாகத் தமது வருத்தத்தைப் பதிவு செய்கிறார்.

ஒரு கவிஞர் உள்ளத்து உணர்வுகளை எழுத்தின் வழியாக, அதைப் படிப்போரை உள்வாங்கச் செய்வதே, அவரின் படைப்புகளின் வெற்றியாகும். அந்த விதத்தில் தமிழியக்கம் நூலில், தமிழ் மொழியை வளரக்காத, பேணிக்காக்காத தமிழர் உயிர் வாழ்வதைக் காட்டிலும் இறப்பதே மேல் என்று,

வாணிகர்க்கும் தமிழென்றால் வெறுப்புண்டோ?
அரசியல்சீர் வாய்க்கப் பெற்றோர்
ஆணிகர்த்த பேடிகளோ?
அரும்புலவர் ஊமைகளோ? இல்ல றத்தைப்
பேணுமற்ற யாவருமே உணர்வற்றுப் போனாரோ?
பெருவாழ் வுக்கோர்
ஏணிபெற்றும் ஏறாத தமிழர்
உயிர் வாழ்வதிலும் இறத்தல் நன்றே (6)

என்று கவி வரிகளின் வழி இடித்துரைக்கிறார்.

இவ்வாறாக, தம் மனக்குமுறலை வெளிப்படுத்திய பாவேந்தர், பல துறை சார்ந்த தமிழர்களைத் தமிழுக்குத் தொண்டாற்ற விடுப்பதையும் கண்கூடாகக் காணலாம்.

ஒண்டமிழ்த்தாய் சிலம்படியின் முன்னேற்றம் ஒவ்வொன்றும் உன்முன் னேற்றம்!
கண்டறிவாய்! எழுந்திரு நீ! இளந்தமிழா, கண்விழிப்பாய்! இறந்தொ ழிந்த
பண்டைநலம் புதுப்புலமை பழம்பெருமை அனைத்தையும்நீ படைப்பாய்! இந்நாள்
தொண்டுசெய்வாய்! தமிழுக்குத் துறைதோறும் துறைதோறும் துடித்தெ ழுந்தே! (11)

உயர்தமிழ்த்தாய் இந்நிலத்தில் அடைகின்ற வெற்றியெலாம் உன்றன் வெற்றி!
அயராதே! எழுந்திரு நீ! இளந்தமிழா, அறஞ்செய்வாய்! நாம டைந்த
துயரத்தைப் பழிதன்னை வாழ்வினிலோர் தாழ்மையினைத் துடைப்பாய்.இந்நாள்
செயல்செய்வாய் தமிழுக்குத் துறைதோறும் துறைதோறும் சீறி வந்தே. (12)

இதைப்போன்றே, மங்கையர், முதியோர், வணிகம் செய்வோர், அரசியல் வாய்ந்தோர், புலவர் பெருமக்கள், குடும்பத்தார், கோயிலார், அறத்தலைவர், விழா நடத்துவோர், கணக்காயர், மாணவர், பாடகர், கூத்தர், பாட்டியற்றுவோர், சொற்பொழிவாளர், ஏடெழுதுவோர், மற்றும் பல துறைகளைச் சார்ந்தோருக்கும் அறிவுரைகள் விடுக்கும் விதமாகக் கவிப்பாக்கள் இயற்றி, தமிழுக்குத் தொண்டு புரிய ஆணித் தரமாகவும், அழுத்தமாகவும், எச்சரிக்கை விடுத்தும் அழைப்பு விடுக்கிறார்.

எடுத்துக்காட்டாக, மாணவரை நோக்கி

கற்கின்ற இருபாலீர் ! தமிழ்நாட்டின் கண்ணொப்பீர் கனியி ருக்க

நிற்கின்ற நெடுமரத்தில் காய்கவர நினையாதீர்.மூது ணர்வால்
முற்கண்ட எவற்றினுக்கும் முதலான நந்தமிழை இகழ்த லின்றிக்
கற்கண்டாய் நினைத்தின்பம் கைக்கொண்டு வாழ்ந்திடுவீர் நன்றே என்றும். (76)

என அழைப்பு விடுப்பதன் ஊடாகவும், பெருஞ்செல்வரை நோக்கி

கோயில்பல கட்டுகின்றீர் குளங்கள்பல வெட்டுகின்றீர் கோடை நாளில்
வாயிலுற நீர்ப்பந்தல் மாடுரிஞ்ச நெடுந்தறிகள் வாய்ப்பச் செய்தீர்.
தாயினும்பன் மடங்கான அன்போடு மக்கள்நலம் தாவுகின்றீர்.
ஆயினும்நம் தமிழ்நாட்டில் செயத்தக்க தின்னதென அறிகி லீரே. (111)

தமிழுயர்ந்தால் தமிழ்நாடு தானுயரும், அறிவுயரும் அறமும் ஓங்கும்.
இமயமலை போலுயர்ந்த ஒருநாடும் தன்மொழியில் தாழ்ந்தால் வீழும்.
தமிழுக்குப் பொருள்கொடுங்கள் தமிழறிஞர் கழகங்கள் நிறுவி டுங்கள்.
தமிழ்ப்பள்ளி கல்லூரி தமிழ்ஏடு பலப்பலவும் நிலைப்பச் செய்வீர்! (112)

என அறிவுறுத்தியும் - தமிழ் மொழியின் வளர்ச்சியின் தமிழ்நாடு தானாகவே உயரும், அறிவு பெருகும், அறமும் ஓங்கும் எனவும் வலியுறுத்திக் கூறுகிறார்.

தமிழியக்கம் நூலின் கவிப்பாக்கள் ஊடாக நாம் கடந்து வரும்போது, தமிழின் மேல் நாம் பற்றுக்கொள்ள, அனைத்துக் கவிப்பாக்களுமே நமக்குத் தூண்டுகோலாக அமையும். தமிழ் மொழியின்காண் உணரப்படும் பிற மொழிக் கலப்பை அகற்றுவதற்கு, பிறமொழித் திணிப்பை எதிர்ப்பதற்கு தமிழ் நாட்டவர் அனைவரும் ஓர் இயக்கமாக இணைய வேண்டும் எனவும், இறுதிப் பாடல் வழியாகவும் அழைப்பு விடுத்து நிறைவு செய்கிறார்.

விழிப்போரே நிலைகாண்பார் விதைப்போரே அறுத்திடுவார் களைகாண் டோறும்
அழிப்போரே அறஞ்செய்வார் அறிந்தோரே உயர்ந்திடுவார்! ஆதல் ஆர்வம்
செழிப்போரே,இளைஞர்களே, தென்னாட்டுச் சிங்கங்காள்! எழுக! நம்தாய்
மொழிப்போரே வேண்டுவது தொடக்கஞ்செய் வீர்வெல்வீர் மொழிப்போர் வெல்க! (120)

தமிழியக்க நூல் உணர்த்தும் கவி யுத்திகள்:

தமிழ் இலக்கணத்தை, குறிப்பாக யாப்பிலக்கணத்தின் அடி ஆழம் வரை நீந்திக் கரை கண்டவர் பாவேந்தர் பாரதிதாசனார். யாப்பிலக்கணத்தின் அசை, சீர், அடி, சந்தம், தொடை,

இயைபு, முரண் என அனைத்தும் முழுமையாய் அமைத்து மரபுக் கவிதைகளை அழகாய்ப் படைப்பவர் பாரதிதாசனார் என்பது நாம் அறிந்ததே.

யாப்பிலக்கணத்தின் விதிகளின்படி,
120 கவிப்பாக்களையும் அறுசீர் கழிநெடிலடி ஆசிரிய விருத்தங்களால் எழுதிப் படைத்திருக்கிறார்.

மரபுக்கவிதை வழி நின்று இயற்றினாலும், எளிய தமிழ்ச் சொற்கள், படிப்போர் மனத்தில் சிந்தனைகளைப் பதியமிட்டு, கவிஞர் உரைக்க நினைத்ததை உள்ளத்தில் உரம் பாய்ச்சி, தமிழர்பால் தமிழ்த்தாயின் தாக்கத்தை, ஏக்கத்தைச் செலுத்தி, இயக்கமாக இணைதலை வலியுறுத்திச் சொல்லியிருக்கிறார்.

முடிவுரை:

இணையவெளிப் புரட்சி, ஆறாய் கரைபுரண்டோடும் இக்காலச் சூழலில், கவிதை இயற்றுவோரும் ஆற்றில் பெருகித் திரியும் கயல்களாய், கவிதைகளோடு நீச்சலடிக்கும் சூழலையும் நாம் கண்டுணரலாம். “வாசிக்கப்படும் கவிதைகளைக் காட்டிலும் எழுதப்படும் கவிதைகள் எண்ணிலடங்கா“ என்பது இணைய வெளியில் காணப்படும் போக்கு.

எண்ணற்ற கவிஞர்கள் உருவாவது மொழியின் வளர்ச்சிக்கும், இலக்கியப் பரவலாக்கத்திற்கும் இன்றியமையாதது எனினும், சமூக மாற்றத்தின் கருவிகளாய், ஏற்றத் தாழ்வுகள் அகற்ற முற்படும் எழுத்தாளுமைகளாய், மனிதம் போற்றும் மாமனிதர்களால் அவர்கள் உருவாவதே அதனிலும் மேலானது என்ற எண்ணம் தமிழ்க் கவிதை உலகில் விதைக்கப்பட வேண்டும்.

இவ்வாறு, ஆற்றல் மிகுந்த கவிஞர்களாய் தங்களை அடையாளப்படுத்திக் கொள்ள விரும்பும் கவிப் பெருமக்கள், பாவேந்தரின் “‘தமிழியக்கம்’” போன்ற நூல்களில் உள்ள கவிப்பாக்களை கவிஞர்கள் உய்த்துணரும் போது, அவர்களும் தங்களின் எழுத்துப் படைப்புகளை உரமிக்க, சமூக நோக்குள்ள படைப்புகளாக உருவாக்க வேண்டும் என்ற உணர்வு உள்ளத்தின் ஆழத்தில் ஏற்படுவது திண்ணம்.

இத்தகைய நோக்குடன் நாம் எல்லோரும் பயணிப்போம்.

எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்

மங்காத தமிழென்று சங்கே முழங்கு!

என்ற பாவேந்தரின் அடிபற்றி தமிழால் இணைவோம்! தமிழோடு உயர்வோம்!!